**சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல நிதியம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டல நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, திரண்ட நிதியத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்தால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1. கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயற்திட்டத்தின் கீழ் 18 தேரர்களுக்கு ரூபா 100,000 படியாக ரூபா 1,800,000 தொகையொன்று முதலாவது கட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய இரண்டாவது கட்டமாக ரூபா 100,000 படி செலுத்த வேண்டிய ரூபா 1,800,000 ஆன தொகையை செலுத்தவதற்கான ஏற்பாடொன்று 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படாததுடன் 2022 ஆம் ஆண்டில் ரூபா 300,000 ஆன தொகை மட்டும் மூன்று தேரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீதமுள்ள ரூபா 1,500,000 ஆன தொகைக்காக 2022 ஆம் ஆண்டிலும் ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | பௌத்த விகாரைகளுக்கு குழந்தைகளை அர்ப்பணித்த 18 பெற்றோருக்கு புதுபுன் மாபிய உபகார வீடமைப்பு உதவித.தொகை முதலாவது கட்டமாக ரூபா 100,000 படி ரூபா 100,000 வழங்கப்பட்டதுடன் முன்னேற்றத்தை சரிபார்த்த பிறகு, இரண்டாவது கட்டமாக 5 பெற்றோருக்கு ரூபா 500,000 தொகையை வழங்கவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னேற்ற அறிக்கை கிடைத்த பின்னர் மீதமுள்ள 13 பெற்றோருக்கு இரண்டாவது கட்டத்ததை செலுத்துவவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய செலவுகள் அட்டுறு செலவுகளாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தால 2022 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அன்றைய திகதியில் காணப்பட்ட கொடிகள் மற்றும் ஸ்டிக்கர்களின் அளவு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வருடத்திற்கான இருப்பு கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவாளர் தேரர்களிடம் கொடிகள் ஒப்படைக்கப்படுவதால், மீதமுள்ள கொடிகள் தொடர்பான சரியான தரவுகளைப் பெறுவது கடினம் என்பதால், எதிர்காலத்தில் புதிய கட்டுப்பாட்டுச் சபைக்குத் தெரிவித்து, இருப்பு கணக்கெடுப்பொன்றை நடாத்தவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிப்பட வேண்டியமை மற்றும் அதற்குப் பொருந்தமான முறையில் நிதிக்கூற்றுக்களில் வெயிப்புடுத்தல் செய்யப்பட வேண்டியமை. |
| (இ) | விற்பனைக்காக காணப்பட்ட துணிகளில் தயாரிக்கப்பட்ட பௌத்தக் கொடிகளின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியின் படி 2371 என்பதாக பதிவேட்டின் பிரகாம் அவதானிக்கப்பட்டுள்ள போதிலும், இது தொடர்பில் பௌதீகக் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அந்த கொடிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இருப்பு கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டு அக்கொடிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிப்பட வேண்டியமை மற்றும் அதற்குப் பொருந்தமான முறையில் நிதிக்கூற்றுக்களில் வெயிப்புடுத்தல் செய்யப்பட வேண்டியமை. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2014 இன் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனங்களுக்கான சபை (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 6 ஆம் பந்தியின் (ஊ) உப பிரிவு | நிதியத்தின் நோக்கங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான அளவு உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களை நியமித்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்ததுதல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக புதிய கட்டுப்பாட்டுச் சபைக்கு மீண்டுமொரு முறை தெளிவுபடுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 07 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த சமஸ்த லங்கா சாசனங்களுக்கான சபை விதிக்கோவையின் 8.1 ஆம் பந்தி | பொதுக்கூட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், நிர்வாகக் கூட்டம் மாதத்திற்கு ஒருமுறையும் நடாத்தப்பட வேண்டும் என்ற போதிலும், 02 பொதுக் கூட்டங்களும், 04 நிர்வாகக் கூட்டங்களும் மட்டுமே மீளாய்வாண்டில் மதிப்பாய்வில் நடாத்தப்பட்டன. கூட்டங்கள் நடாத்தப்படாததால், அதற்கேற்ப திட்டமிடப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது | நாட்டில் நிலவிய மோசமான சூழ்நிலை காரணமாக கூட்டங்களை திட்டமிட்டபடி நடாத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்ததாக தெரிவித்துக் கொள்கிறேன். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மீளாய்வு ரூபா 3,907,854 ஆன மிகை என்பதுடன் அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 1,192,333 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,100,187 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வைப்புகளுக்கான வட்டி வருமானம் அதிகத்தமை, மருத்துவ உதவித்தொகை வழங்குதல் குறைவடைந்தமை, மற்றும் கட்டிட மானியங்களுக்காக நன்கொடை மேற்கொள்ளப்படாமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------- | ----------------------- | ----------------- |
| (அ) | அற நெறிப் பாடசாலைக் கொடிகள் விற்பனை தொடர்பான பணம் சேகரிப்பு மற்றும் வங்கியில் இடல் தொடர்பான பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அறிக்கைகள் தயாரிக்கப்படாததால், மீளாய்வாண்டில் மற்றும் முந்தைய ஆண்டுகளில் பெறப்பட்ட வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | பதிவாளர்களுக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை அதற்கான பொழிப்பு அறிக்கைகள் அனுப்பப்படவில்லை என்பதுடன் அடுத்த பொதுச்சபைக் கூட்டத்தில் உரிய பொழிப்பு அறிக்கைகளை கொண்டு வருமாறு மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கொண்டு வரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில், 18 பணிகள் இடம் பெற்றிருந்த நிலையில், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இதய அறுவை சிகிச்சைக்கு உதவி வழங்குவது தவிர, பிற பணிகள் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய மோசமான சூழ்நிலை காரணமாக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதிருந்தமையை தெரிவித்துக் கொள்கிறேன். | கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட பணிகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டியமை. |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017,2018 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, அறநெறிப் பாடசாலை கொடிகள் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் வருடா வருடம் குறைவடைந்துள்ளதுடன், கொடிகளை அச்சடித்து விற்பனை செய்வதில் முறையான முகாமைத்துவம் இன்மையே இந்த வருமானம் குறைவதற்கு வழிவகுத்துள்ளமை அவதானிக்கப்படுகின்றது. | நாட்டில் நிலவிய மோசமான சுகாதார நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, 2019 ஆம் ஆண்டுக்கு பிறகு இந்த ஆண்டு வரை கொடிகளை அச்சடித்து விற்பனை செய்ய முடியாத நிலையில், கொடி வருமானம் குறைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | கொடி விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக்கோவையின் நிதிப் பிரமாணம் 134(2) இன் பிரகாரம் நிதியம் தொடர்பில் உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக புதிய கட்டுப்பாட்டு சபைக்கு அறிவித்திருநது எதிர்காலத்தில் மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்றும் தயாரிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) (i)2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் (i)38(ஊ) மற்றும் 40 ஆம் பந்திகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளக கணக்காய்வு பணிகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு பயனுள்ள முறைமையொன்று உள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை மற்றும் | இது தொடர்பாக புதிய கட்டுப்பாட்டு சபைக்கு அறிவித்திருநது எதிர்காலத்தில் மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளக கணக்காய்வுத் திட்டமொன்றும் தயாரிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் எவ்வித கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) 41(1) ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் குறித்து தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் நிதியம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு ட்டிருக்கவில்லை. பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |